பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 13 வெள்ளிக்கிழமை 27.06.2025 கதிர் 230

## இது ரகசியம் அல்ல!

யாழ். மாவட்ட சுயேச்சை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அருச்சுனாவின் கதிரைக்கு மேலே மிகக் கூரான கத்தி தொங்குகின்றது என்பது நேற்று அவருக்கு ☞2

## தோட்டக் கிணற்றில் தவறி வீழ்ந்த 10 வயதுச் சிறுவன் பரிதாபச் சாவு

அச்சுவேலி தோப்பு பகுதியில் நேற்று மாலை கிணற்றில் தவறி விழுந்த சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்தான். அதேயிடத்தைச் சேர்ந்த பிரதீபன் தர்சன் எனும் சிறுவன் 10 வயதுச் சிறுவனே உயிரிழந்தான்.

யாழ். மாவட்டத்தில் உள்ள அச்சுவேலி தோப்பு பகுதியில் பேரனுடன் தோட்டத்திற்கு நீர் இறைப்பதற்காகச் சென்ற சிறுவனே கிணற்றில் தவறி விழுந்தான் என்று பொலிஸார் தெரிவித்தனர். பேரன் பயிர்களுக்கு ☞6

## கொடிகாமம் - பரந்தன் இடையே பயணிகளை ஏற்றுவது கட்டாயம்

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா பேருந்துகளுக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் துணுக்காய் ஆகிய இடங்களுக்கும் இடையில் போக்குவரத்தில் ஈடுபடும் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் அனைத்தும் கொடிகாமத்தில் இருந்து பரந்தவரையில் குறுந்தூர சேவை அடிப்படையில் ☞6

## தென்னாபிரிக்க முன்னாள் தலைவருடன் அரசுத் தலைவர் நேற்றுச் சந்தித்துப் பேச்சு

அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க மற்றும் தென்னாபிரிக்க குடியரசின் முன்னாள் ஜனாதிபதி தபோ ம்பெக்கி (Thabo Mbeki) இடையிலான சந்திப்பு நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கைக்கு இது தனது முதல் பயணம் என்றும், கடந்த காலங்களில் இலங்கையின் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தில் தான் ஆர்வமாக இருந்தார் எனவும் கூறிய முன்னாள் ஜனாதிபதி ம்பெக்கி, இதுபோன்ற சமயத்தில் இலங்கைக்கு வருகை தருவது மகிழ்ச்சியளிக்கும் விடயம் என்று கூறினார்.

தென்னாபிரிக்காவும்இலங்கையும்புவியியல் ரீதியாக தூரம் இருந்தாலும், வெவ்வேறு இனங்கள், மதங்கள் மற்றும் கலாசாரங்கள் இருப்பதால் இரு நாடுகளும் ஒற்றுமைகளைக் கொண்டுள்ளன என்று அவர் கூறினார். அமைதி மற்றும் நல்லிணக்கத்தை அடைவதில் இரு நாடுகளும் ஒரே மாதிரியான சவால்களை எதிர்கொள்கின்றன என்றும், பல்வேறு வகையான மக்கள் குழுக்களை ஒன்றிணைப்பதில் இலங்கை ஜனாதிபதியுடன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள தான் விருப்பத்துடன் இருப்பதாகவும் அவர் கூறினார்.

பல்வேறு வகையான மக்கள் குழுக்களை ஒன்றிணைப்பதன் மூலம் தற்போதைய பொருளாதார சவால்கள் மற்றும் தேசிய நல்லிணக்க சவால்களை இலங்கை ஜனாதிபதி சமாளிக்க முடியும் என்று ம்பெக்கி நம்பிக்கை தெரிவித்தார்.

நாடுகளுக்கு இடையே ஒற்றுமையை மேம்படுத்துவதற்கும், நாடு எதிர்கொள்ளும் பொருளாதார சவால்களை சமாளித்து நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கும் தான் உறுதிபூண்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர் ஸ்தானிகர் செண்டில் ஷால்க் (Sandile Schalk), தபோ ம்பெக்கி நிதிய பிரதம நிர்வாக அதிகாரி மெக்ஸ்வெல் போக்வானா (Maxwell Boqwana), தபோ ம்பெக்கி நிதிய பிரதம செயல்பாட்டு அதிகாரி லுக்ஹன்யோ நீர் (Lukhanyo Neer) ஆகியவர்களும் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே ஆகியோரும் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

கெபிடல் மகாராஜா குழுமத்தின் நிறைவேற்றுக் குழுமப் பணிப்பாளர் ஷெவன் டெனியல் மற்றும் கெபிடல் மகாராஜா குழுமத்தின் ☞2

# பொறுப்புக்கூறல் இறுதியில் முற்றிலும் அரசின் கடமை

## ஐ.நா. மனித உரிமைகள் உயராணையர் தனது பயணத்தின் முடிவில் வலியுறுத்து



பாதிக்கப்பட்டவர்களின் நம்பகத் தன்மையையும் நம்பிக்கையையும் பொறுப்புக்கூறலையும் தக்கவைக்கக்கூடிய உள்நாட்டுப் பொறுப்புக்கூறல் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவதில் இலங்கை கடும் சவால்களை எதிர்கொள்கிறது. இதனாலேயே மக்கள் நீதியை (இலங்கைக்கு) வெளியே தேடுகின்றார்கள். சர்வதேச மட்டத்திலான உதவிகளுடன் இது முற்றிலும் அரசின் கடமை, பொறுப்பு. அது தேசிய ரீதியிலானதாக இருப்பதும் முக்கியம். அது சர்வதேச அர்த்தங்களால் ஆதரிக்கப்படவும் ஊக்குவிக்கப்படவும் முடியும்.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயராணையர் வோல்கர் டர்க் வலியுறுத்தியுள்ளார். இலங்கைக்கான தனது பயணத்தின் முடிவில் அவர் விடுத்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் மூன்றுநாட்களுக்கும் மேலான எனது பயணத்தை ☞2

நல்லிணக்கம், மனித உரிமைகள் விடயங்களில்

## ஆளும்தரப்பின் முயற்சிக்கு வோல்கர் டர்க் முழு ஆதரவு

அரசுத் தலைவருடனான சந்திப்பில் வெளிப்படுத்தினார்

இலங்கையில் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க தலைமையிலான ஆளும்தரப்பு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஐ.நா. மனித உரிமைகள் உயராணையர் வோல்கர் டர்க் (ாலியிவ-ளஷ வீஸ்ஷவ) தனது முழு ஆதரவையும் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் உயராணையர் வோல்கர் டர்க், நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவை சந்தித்தபோது இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இலங்கையில் தற்போது இடம்பெற்று வரும் புதிய அரசியல் மற்றும் சமூக மாற்றத்தைப் பாராட்டிய உயராணையர், வடக்கு மற்றும் தெற்கில் உள்ள அனைத்து மக்களும் தற்போதைய ஜனாதிபதி மற்றும் ஆளும்தரப்பு மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர் என்று அரசுத் தலைவர் செயலகத்தின் ஊடாக அறிக்கை தெரிவித்தது. ☞6

## தடயவியல் அறிவியல் ஆய்வுகூடம் நிறுவ உதவி கேட்கிறது இலங்கை

மனிதப் புதைகுழிகளில் கண்டறியப்படும் மனித எச்சங்கள் தொடர்பில் பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கு ஏற்றவாறான தடயவியல் அறிவியல் ஆய்வுகூடமொன்றை நாட்டில் நிறுவ உதவும்படி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயராணையரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர் இலங்கை அதிகாரிகள்.

ஜூன் 23 இலங்கைக்கு வந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயராணையர் வோல்கர் டர்க் நீதி அமைச்சு, காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் ஆகியவற்றின் அதிகாரிகளை செவ்வாய்க்கிழமை வெளிவிவகார அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின்போது உயராணையருக்கும் அரச கட்டமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் உள்ள க ☞6

## ரில்வின் தலைமையில் ஜேவிபி குழுவை சந்தித்து வோல்க்கர் டர்க் நேற்றுப் பேச்சு

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் உயராணையர் வோல்கர் டர்க் ஜேவிபியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா உள்ளிட்ட குழுவினரை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். ஜேவிபி தலைமை அலுவலகத்தில் பிற்பகலில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

மனித உரிமைகள் மற்றும் நிர்வாகத்தைப் பாதுகாப்பதில் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் முன்னேற்றம் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தின் உயராணையர் தனது மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் ☞2

## சட்டம் ஒழுங்கை செயல்படுத்த ஆளும்தரப்புத் தவறிவிட்டது

எதிர்க் கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

ஜனநாயக நாடொன்றில் இருக்க வேண்டிய வலுவான பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கை தற்போதைய ஆளும்தரப்பு செயல்படுத்தத் தவறிவிட்டது. ஆளும்தரப்பு பல்வேறு புள்ளிவிவரங்களைக் காண்பித்தாலும், மனித உயிர்களை வெறும் புள்ளிவிவரங்களுடன் சுருக்கிக் கொள்ளமுடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசனம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் நேற்று விடேச அறிக்கையொன்றை வெளியிட்ட அவர் அதில் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் தற்போது கொலைக் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

எதிரானவழக்கில்சட்டமாஅதிபர்திணைக்களம் எடுத்த நிலைப்பாட்டில் இருந்து தெளிவாகத் தெரிகிறது. கத்தி எப்போது விழும் என்பதுதான் இப்போதைக்குக் கேள்வி.

அருச்சுனா ராமநாதன் நாடாளுமன்ற உறுப்பினராகத்தொடர்ந்துபதவிவகிப்பதற்கான தகுதியை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட (Writ of Quo Warranto) மனு மீதான விசாரணையைமேன்முறையீட்டுநீதிமன்றம் நேற்றுத் தொடங்கியது.

அபிநவநிவஹல்பெரமுனவின்தலைவர் ஓஷல ஹெராத் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா தனது அரச பதவியிலிருந்து விலகாமலேயே, அதாவது அரச மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றிக்கொண்டே பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுவை சமர்ப்பித்திருந்தார் என்று கூறியே வழக்குத் தாக்கல்செய்யபட்டது. அரசுப்பணியில்இருந்து முதலில் பதவி விலகாமல் வேட்புமனுக்களை சமர்ப்பிப்பது நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் விதிகளை மீறுவதாக ஓஷல ஹேரத் வாதிடுகிறார்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் ஊழல், முறைகேடு அவற்றைச் சீராக்கத் தான் எடுக்கும் முயற்சிகளுக்கு இடையூறு ஏற்படுத்துகின்றார்கள் என்று அருச்சுனா தொடங்கிய நாடகத்தைத் தொடர்ந்து அவர் மீது சுகாதார அமைச்சு ஒழுக்காற்று நடவடிக்கையை எடுத்தது. அவர் முதலில் பணியிடை மாற்றம் செய்யப்பட்டுப் பின்னர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டார். பணி இடைநிறுத்தத்தில் இருந்தபோதே அவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றிருந்தார். இதுவொரு சட்டமீறல் என்று தெரிவித்தே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நீதிபதிகள் மாயாதுன்னே கொரியா மற்றும் மஹேன் கோபல்லவா ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் சட்டத்தரணி அசோக்பரன் வாதிட்டார், அருச்சுனா பொது அதிகாரியாக இருப்பதால், நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படவோ, பதவி வகிக்கவோ அரசமைப்பு ரீதியாக தகுதியற்றவர் என்று வாதிட்டார். அரசமைப்பின் 66(இ) பிரிவை மேற்கோள் காட்டி, அவரது நாடாளுமன்றப் பதவி வெளிதாக்கப்படவேண்டும் என்று வாதிட்டார். நீதிமன்றம் தனது இறுதித் தீர்ப்பை வழங்கும் வரை அவருக்கு எதிராக இடைக்காலத் தடை விதிக்கவேண்டும் என்றும் கோரினார்.

அரசுதரப்பில்ஆஜரானகூடுதல்சொலிசிட்டர் ஜெனரல், அரசுத்தலைவர் சட்டத்தரணி சுமதி தர்மவர்தன, அருச்சுனா இன்னும் ஒரு பொது அதிகாரியாகக் கருதப்படுகிறார் என்பதை உறுதிப்படுத்தினார். அரசமைப்பு தாக்கங்கள் குறித்து அவர் கவலை தெரிவித்ததுடன் பிரிவு 55(3) இன் படி, பொது அதிகாரிகள் மீதான ஒழுங்கு அதிகாரம் பொது சேவைகள் ஆணைக்குழுவிடம் (ஊறரீசீ) உள்ளது என்பதை எடுத்துக்காட்டினார். இருப்பினும், பிரிவு 55(5) இன் கீழ், ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் மீது மேற்பார்வை அதிகாரம் உள்ளது. இடைநீக்கத்தின் கீழ் உள்ள ராமநாதன், இப்போது தனது சொந்த ஒழுங்கு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அமைப்பின் மீது மேற்பார்வையிடும் அதிகாரத்தைக் கொண்டுள்ளார், இது ஒரு தெளிவான முரண்பாட்டுக்கு வழிவகுக்கிறது என்று சுமதி விளக்கினார்.

அருச்சுனா சார்பில் வாதங்களை முன்வைப்பதற்குஅவரதுசட்டத்தரணிகள்கால அவகாசம்கேட்டதால்வழக்குஜூலை 2, 2025 வரைக்கும் ஒத்திவைக்கப்பட்டது. அவர்கள் என்னதான் வாதங்களை முன்வைத்தாலும் இந்த விடயத்தில் அருச்சுனாவின் பதவியைக் காப்பாற்றுவது மிகச்சவாலானது என்பதுதான் சட்ட வல்லுநர்களின் கருத்து.

அருச்சுனாவிற்கு எதிரான வழக்கு இப்படி முடிந்தால், தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ரஜீவனுக்கு எதிராகவும் இதுபோன்ற வழக்கு ஒன்று நகர்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. அவரும் பொதுத் தேர்தலில் வேட்புமனுவைத் தாக்கல் செய்வதற்குமுன்பாகபாடசாலைஅதிபர்என்கிற தனது அரச பதவியிலிருந்து முழுமையாக விலகியிருக்கவில்லை. வேட்புமனு தாக்கல் செய்யப்படுவதற்கு ஓரிரு தினங்கள் முன்பாகவே அவர் தனது பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்திருந்தார். அந்த விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு தேர்தலுக்குள் அவருக்கு முடிவு அறிவிக்கப்படவில்லை. நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றபோது அவர் அரச பணியாளராகவே தொடர்ந்தார். எனவே அவருக்கெதிரான வழக்கு வரும்போதும் சட்டமா அதிபர் திணைக்களம் அருச்சுனா வழக்கில் எடுத்த நிலைப்பாட்டையே எடுக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பொறுப்புக்கூறல்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான் முடித்துவிட்டேன், மாற்றத்தின் உண்மையான உத்வேகத்தை நான் உணர்கிறேன். எனது வருகையின்போது, நாட்டின் அரசியல் மற்றும் மதத் தலைவர்கள் முதல் சிவில் சமூக உறுப்பினர்கள் மற்றும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள்வரை பல்வேறு தரப்பினருடன் மனித உரிமைகள் பிரச்சினைகள் குறித்து விவாதித்தேன். இந்த பணக்கார மற்றும் பன்முகத்தன்மை கொண்ட – அதேபோல் பிரமிக்க வைக்கும் அழகான – நாட்டிற்கு முன்னால் இருக்கும் சவால்கள் மற்றும் வாய்ப்புகளை நன்கு புரிந்துகொள்ள எனது கலந்துரையாடல்கள் எனக்கு உதவின.

எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த வருகைக்கு ஆளும்தரப்பு வழங்கிய ஒத்துழைப்பை நான் ஆழ்ந்த நன்றியுடன் ஒப்புக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு மணி நேரத்திற்கு முன்பு, நான் அரசுத் தலைவரைச் சந்தித்தேன். தலைமை அமைச்சரையும், மற்ற அமைச்சர்கள் மற்றும் அரசியல்கட்சித்தலைவர்கள்மற்றும்அரசியல் பரப்பு முழுவதிலுமிருந்து வந்த நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்திருக்கின்றேன். சிக்கலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான உண்மையான திறந்த தன்மையை எங்கள் விவாதங்கள்காட்டின. கொழும்பில், தலைமை நீதிபதி, சட்டமா அதிபர், மூத்த பாதுகாப்பு அதிகாரிகள், தேசிய மனித உரிமைகள் ஆணையம், காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம் மற்றும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம்ஆகியவற்றின் அதிகாரிகளையும் சந்தித்தேன்.

முழுவதும்சிவில்சமூகபிரதிநிதிகளுடனான மதிப்புமிக்க கலந்துரையாடல்களையும் நடத்தினேன், மேலும் மனித உரிமை மீறல்களில் இருந்து தப்பிப்பிழைத்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் இதயத்தை உடைக்கும் சாட்சியங்களைக் கேட்டேன்.

செம்மணியில் சமீபத்தில் மீண்டும் திறக்கப்பட்ட புதைகுழிக்கு நேற்று நான் சென்றது,இலங்கையில்பலரின்வாழ்க்கையை கடந்த காலம் வேட்டையாடுகிறது என்பதை நினைவூட்டுவதாக இருந்தது. இதற்கு அனுமதி வழங்கப்பட்டதற்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அந்த இடத்தில், ஒரு அன்புக்குரியவரை இன்னும் தேடி, இன்னும் துக்கத்தில் இருக்கும் ஒரு குடும்பத்தைச் சந்திக்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது; இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் ஆயிரக்கணக்கான மற்றவர்களைப் போலவே, 30 ஆண்டுகள் தெரியாமல் இருந்த பிறகும், அவரது எச்சங்கள் அங்கேயே தோண்டி எடுக்கப்படலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

பாதிக்கப்பட்டவர்களின்குழுக்கள்காணாமல் போன தங்கள் அன்புக்குரியவர்களுக்கு உண்மை மற்றும் நீதிக்காக தொடர்ந்து வாதிடுகின்றன. யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலைக்கு நான் சென்றபோது பல தாய்மார்களிடமிருந்தும், தெற்கில் கட்டாயமாக காணாமல் போனதால் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்தும்நான்இதனை அவதானித்தேன். எடுத்துக்காட்டாக, 1989 இல் காணாமல் போன தனது உறவை தென் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு பெண் இன்னும் ஊர் ஊராகத் தேடிச் செல்கிறார், மேலும் சிங்களவர்கள், தமிழ் மற்றும் முஸ்லிம்களின் கண்ணீர் அப்படியே இருக்கிறது.

நேற்று யாழ்ப்பாணத்தில் நான் கண்டது போல, பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் இடம் வளர்ந்து வருவதைப் பார்த்து நான் உற்சாகமடைகிறேன், ஆனால் இந்த மாற்றம் இருந்தபோதிலும், மனித உரிமை பாதுகாவலர்களைக் கண்காணிக்கும் அதே பழைய முறைகள் தொடர்கின்றன என்பதையும் கேள்விப்பட்டேன்.

கடந்த காலத்தின் மரபு புதிய ஆளும்தரப்பிற்கு ஒரு கடினமான சவாலை முன்வைக்கிறது. கடந்த சில மாதங்களாக அரசுத் தலைவரின் உரைகளால் நான் பின்பற்றப்பட்டு ஊக்குவிக்கப்பட்டேன், அதில் அனைத்து சமூகங்களையும் சேர்ந்த தனிநபர்களின் பகிரப்பட்ட வலி மற்றும் துக்கத்தை அவர் பகிரங்கமாக அங்கீகரித்தார். இந்தஉத்வேகத்தைகட்டியெழுப்புவதும்,அதை உறுதியான முடிவுகளாக மொழிபெயர்ப்பதும் முக்கியம், இதனால் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதற்கான உண்மை வெளிப்படும். ஒப்புதல் மற்றும் உண்மையைச் சொல்வது, நீதி, இழப்பீடு மற்றும் மீண்டும் நிகழாமல் இருப்பது போன்ற குணப்படுத்துதல் மற்றும் மூடுதலுக்கான முக்கியமான படிகள்.

பாதிக்கப்பட்டவர்களின் நம்பகத் தன்மையையும் நம்பிக்கையையும் பொறுப்புக்கூறலையும் தக்கவைக்கக்கூ-டிய உள்நாட்டுப் பொறுப்புக்கூறல் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவதில் இலங்கை கடும் சவால்களை எதிர்கொள்கிறது. இதனாலேயே மக்கள் நீதியை (இலங்கைக்கு) வெளியே தேடுகின்றார்கள். சர்வதேச மட்டத்திலான உதவிகளுடன் இது முற்றிலும் அரசின் கடமை, பொறுப்பு. அது தேசிய ரீதியிலானதாக இருப்பதும் முக்கியம். அது சர்வதேச அர்த்தங்களால் ஆதரிக்கப்படவும் ஊக்குவிக்கப்படவும் முடியும். இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பான தகவல்களைச் சேகரித்து பாதுகாக்கவும், மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களை பகுப்பாய்வு செய்யவும் எனது சொந்த அலுவலகம் கட்டளையிடப்பட்டுள்ளது, மேலும் இந்த நோக்கத்திற்காக ஒரு பிரத்யேக திட்டத்தை நிறுவியுள்ளது. இலங்கையிலும் சர்வதேச அளவிலும் எதிர்காலத்தில் நிகழக்கூடிய பொறுப்புக்கூறல் முயற்சிகளுக்கு இது உதவிகரமாக இருக்க முடியும் என்று நம்புகிறேன்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் உட்பட சில முக்கியமான வழக்குகளில் விசாரணைகள் மற்றும்வழக்குத்தொடர்தல்களைஆளும்தரப்பு மீண்டும்தொடங்கியுள்ளது, மேலும்இவற்றை மேலும்முன்னெடுக்கநான்ஊக்குவிக்கிறேன். குறைந்தபட்சம் சில நீண்டகால மற்றும் பிரதிநிதித்துவ மனித உரிமை வழக்குகளில் முடிவுகளை அடைவது ஒரு சக்திவாய்ந்த ஆர்ப்பாட்டம் மற்றும் நம்பிக்கையை வளர்க்கும் விளைவை ஏற்படுத்தும்.

இன்று, சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களின்சர்வதேசதினத்தையும் நாங்கள்கொண்டாடுகிறோம். மோதலின்போது சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை முக்கியமாக இடம்பெற்றன, இன்றும் பதிவாகின்றன. இலங்கை சட்டத்தின் கீழ் சித்திரவதை குற்றமாக இருந்தாலும், நாடு முழுவதும் சித்திரவதை குறித்த புகார்கள் தொடர்ந்து பெறப்படுகின்றன. எனவே, இந்த முறையான பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு நிறைய வேலைகள் செய்யப்பட வேண்டியிருப்பதால், பாதுகாப்புத் துறை மற்றும் காவல்துறை சீர்திருத்தம் மிக முக்கியமானவை.

இலங்கை மனித உரிமைகள் ஆணையத்தின் நீண்டகால பணியை நான் ஒப்புக்கொள்கிறேன், அவர்களுடன் நாங்கள் ஒரு வலுவான கூட்டாண்மையைக் கொண்டுள்ளோம், குறிப்பாக தடுப்புக் காவல் இறப்புகள் குறித்து காவல்துறையுடனான ஊடாட்டத்தில் முக்கியமான பணிகளைத் தொடங்கியுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (PTA) இரத்து செய்யவேண்டும் என்றும், அதன் பயன்பாட்டை நிறுத்தி வைக்கவேண்டும் என்றும் நான் வலியுறுத்துகிறேன், மேலும் அச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விரைவாக மதிப்பாய்வு செய்து விடுவிக்க வலியுறுத்துகிறேன். மேலும், ஆன்லைன் பாதுகாப்புச் சட்டத்தையும் ரத்து செய்யவேண்டும்.

இலங்கையில் பெண்கள் மற்றும் பாலின உரிமைகள் சமீபத்திய ஆண்டுகளில் முன்னேற்றத்தையும் தொடர்ச்சியான சவால்களையும் கண்டுள்ளன. நவம்பர் 2024 தேர்தல்களில், 22 பெண்கள் நாடாளுமன்றத்திற்குத்தேர்ந்தெடுக்கப்பட்டனர், பெண் பங்கேற்பு 9.8 சதவீதமாக இரட்டிப்பாக்கப்பட்டது, இது கடந்த காலத்தை விட அதிகமாகும், ஆனால் மேம்படுத்தப்பட வேண்டும். பணியிடத்தில், பெண்கள் ஒரே வேலையில் ஆண்களை விட 27 சதவீதம் குறைவாக சம்பாதிக்கிறார்கள், மேலும் பல பெண்கள் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையின் பரவலை எழுப்பினர். ஒரே பாலின உறவுகளை குற்றமற்றதாக்கும் மசோதாவை நான் வரவேற்கிறேன்,இதுநாடாளுமன்றத்தின்முன் உள்ளது என்பதை நான் புரிந்துகொள்கிறேன். முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம்சர்வதேசமனிதஉரிமைகள்சட்டத்திற்கு ஏற்ப திருத்தப்படவேண்டும்.

2022 ஆம் ஆண்டில், இலங்கையர்கள், குறிப்பாக மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்கள், வாழ்க்கையின் நினைவிலேயே மிக மோசமான பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டனர். தோட்டங்களில் வேலை செய்பவர்கள் எதிர்கொள்ளும் கடுமையான கஷ்டங்களைப் பற்றிய கணக்குகளைக் கேட்டு நான் மிகவும் வருத்தமடைந்தேன், மேலும் நிலம், வீட்டுவசதி மற்றும் மேம்பட்ட ஊதியம் உள்ளிட்ட அவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவது முக்கியம்.

2022 ஆம் ஆண்டு 'அரகலய' போராட்டங்களிலிருந்து எழும் பிரபலமான கோரிக்கைகள் ஊழல் மற்றும் பொருளாதார தவறான நிர்வாகத்திற்கான பொறுப்புக்கூறல் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தன. இந்த விஷயத்தில் அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறது என்பது எனக்கு ஊக்கமளிக்கிறது, மேலும் இந்த நம்பிக்கை மற்றும் மாற்ற அலை மேலும் தொடரும் என்று நம்புகிறேன்.

இது ஒரு புதிய சமூக ஒப்பந்தத்திற்கான அடிப்படையாகஇருக்கலாம். மனிதஉரிமைகள் பொருளாதாரத்திற்கு மாறுவதற்கான வாய்ப்பு கூடஉள்ளது–இதுபொருளாதாரத்திற்குஅப்பால் பார்க்கிறது, சமூகப் பிரச்சினைகளுக்கான முக்கியகாரணங்களில்கவனம்செலுத்துகிறது, மேலும் சமத்துவமின்மை, அநீதி மற்றும் கடந்தகாலத்திலிருந்துநிலைத்திருக்கமுடியாத நடைமுறைகள் போன்ற பிரச்சினைகளை நிவர்த்தி செய்கிறது.

இராணுவத்தால் இன்னும் ஆக்கிரமிக்கப்பட்டு பொருளாதார ரீதியாகப் பயன்படுத்தப்படும் நிலங்களை விடுவிப்பதன் முக்கியத்துவத்தையும், தொல்பொருள், மத மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட நிலத் தகராறுகளை சமூகங்களுடன் கலந்தாலோசித்துத் தீர்ப்பதன் முக்கியத்துவத்தையும் நான் வலியுறுத்தினேன். முஸ்லிம்கள்விரும்பினால் தங்கள் நிலங்களுக்குத் திரும்புவதற்கு வசதி செய்யப்பட வேண்டும்.

மதத் தலைவர்களுடனான எனது சந்திப்புகளின் போது, மனித உரிமைகள் மற்றும் மதங்களுக்கு இடையிலான புரிதலை ஊக்குவிப்பதில் அவர்கள் வகிக்கும் முக்கிய பங்கைநான்வலியுறுத்தினேன். அமைதியான, இணக்கமானமற்றும்நெறிமுறைசமூகத்திற்கு இது ஒரு முக்கிய அங்கமாகும். மத அடிப்படையில் வெறுப்புப் பேச்சு மற்றும் தூண்டுதல்பெருகியமுறையில்பொதுவானதாகி வரும் உலகில், இதை முறியடிக்க தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்துமாறு நான் அவர்களை வலியுறுத்தினேன்.

புதிய ஆளும்தரப்பு 'தேசிய ஒற்றுமை' என்றஅடிப்படைஇலக்கைநிர்ணயித்துள்ளது. விரைவான வெற்றிகளும் நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கைகளும் நம்பிக்கை மற்றும்நல்லிணக்கத்தைமேம்படுத்துவதற்கு முக்கியமாகும். இந்த விடயத்தில் உதவவும் உதவி வழங்கவும் எனது அலுவலகம் தயாராக உள்ளது.

இனம், மதம், மொழி, கலாசாரம், சாதி மற்றும் வர்க்கம் ஆகியவற்றின் வேரூன்றிய அடையாள அரசியலின் கீழ் ஒரு கோட்டை வரைய ஆளும்தரப்பிலும்சிவில்சமூகத்திலும் ஒரு தெளிவான விருப்பம் உள்ளது என்ற வலுவான நம்பிக்கையுடன் நான் இங்கிருந்து புறப்படுகிறேன்.

போர்கள், பொருளாதார நிச்சயமற்ற தன்மை மற்றும் மனித உரிமை மீறல்கள் துரதிர்ஷ்டவசமாக விதிமுறையாக மாறிவரும் உலகில், இலங்கைநம்பிக்கையின்கதையாக மாற வேண்டும் என்பதே எனது விருப்பம், மேலும் அரசாங்கத்துடன் ஆக்கபூர்வமான ஈடுபாட்டைஎதிர்நோக்குகிறேன். உண்மையில், இலங்கை அமைதியான சகவாழ்வு, மற்றொன்றைப் புரிந்துகொள்வது, சகிப்புத்தன்மை,வேறுபாடுகளைஅங்கீகரிப்பது, அதே நேரத்தில் பன்முகத்தன்மையை ஏற்றுக்கொள்வது மற்றும் அதை இந்த நாட்டின் வளமானதிரைச்சீலையின்செழுமையாகவும் பலமாகவும்பார்ப்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக மாற முடியும் – என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஆட்சி மாற்றம் ஏற்பட்டு 8 மாதங்களாகியும் பிரச்சினைகள் தீரும் அறிகுறியே இல்லை

## புதிய மார்க்சிச லெனினிசக் கட்சி விளாசல்

தேசிய மக்கள் சக்தி (என்பிபி) ஆட்சி ஏற்பட்டு எட்டு மாதங்கள் கடந்த நிலையில் நாடும் மக்களும் எதிர்நோக்கியுள்ள, மோசமடைந்துள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கும் வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளடங்கிய தேசிய இனங்களின் பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வு காணும் அறிகுறிகள் எதுவுமே காணப்படவில்லை. மக்களைத் திசை திருப்பி வைத்திருப்பதிலேயே கவனம் செலுத்தப்படுகிறது என்று புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மத்திய குழுவின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

நாடும் மக்களும் எதிர் நோக்கியுள்ள பாரிய பொருளாதாரநெருக்கடிகளுக்கும்,தீர்க்கப்படாது நீடித்துவரும் தேசிய இனங்கள் எதிர்நோக்கி வரும் தேசிய இனப் பிரச்சினைக்கும் உரிய தீர்வுகள் கிடைக்கும் எனும் நம்பிக்கையிலேயே ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பை நாட்டின் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் வாக்களித்து பதவிக்குக் கொண்டு வந்தனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசுத் தலைவர் பதவிக்கும், மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனானநாடாளுமன்றத்துக்கும் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு வரும் என்று நம்பியே கடந்த கால ஆட்சியாளர்களை நிராகரித்து தேசிய மக்கள் சக்தியினருக்கு மக்கள் வாக்களித்தனர். ஆனால், எட்டு மாதங்கள் கடந்த நிலையில் நாடும் மக்களும் எதிர்நோக்கியுள்ள, மோசமடைந்துள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கும் வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளடங்கிய தேசிய இனங்களின் பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வு காணும் அறிகுறிகள் எதுவுமே காணப்படவில்லை. மக்களைத் திசை திருப்பி வைத்திருப்பதிலேயே கவனம் செலுத்தப்படுகிறது.

பதவிக்கு வருவதற்கு முன்பு மக்களுக்குக் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகள் பற்றி அநுர குமார அரசு கடும் மௌனம் காத்து வருகிறது. 'வளமான நாடு அழகான வாழ்க்கை' எனும் சொற்தொடர் பதவிக்கான வெறும் அலங்கார வார்த்தைகளாகி அவை மறக்கப்பட்டும் வருகின்றன. அதேவேளை அமெரிக்கா தலைமையிலான ஐ.எம்.எவ். எனும் சர்வதேச நாணய நிதியத்தின் கடனும் அறா வட்டியும் தொடர்வதற்கு அதன் மோசமான நிபந்தனைகள் மறுபேச்சின்றி ஏற்கப்பட்டும் உள்ளன. அதன் விளைவே அண்மைய பதினைந்து வீத மின் கட்டண உயர்வாகும்.

அதேபோன்றே வற்வரி உட்பட வரி விதிப்புகளிலும், ஐ எம் எவ் முன்வைக்கும் நிபந்தனைகளின் அடிப்படையிலுமே மருந்துகள் உட்பட பொருள்களின் விலைகள் குறைவடைய முடியாது உள்ளன. அரிசி முதல் உப்புப் புளிவரையான அன்றாட உணவுப்பொருள்களை உழைக்கும் மக்கள் வாங்க முடியாது வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பால் கடும் பாதிப்புகளைப் பெற்று வருகின்றனர். மாற்று வழிதெரியாது மக்கள் திணறித் திண்டாடி நிற்கின்றனர்.

இந்த நிலையில் ஆட்சியில் இருப்பவர்கள் எட்டு மாதங்களுக்கு முன்பு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை, மக்கள் நினைவுபடுத்தத் தொடங்கியுள்ளனர். அதேவேளை இலங்கையின் வளங்கள் இந்திய ஆளும் வர்க்கக் கோப்பி ரேட் பெருமுதலாளிகளுக்குத்தாரை வார்க்கப்பட்டு வருவதையும் காண முடிகிறது.

ஜனாதிபதி அநுராவுக்கும் இந்தியப் பிரதமர் மோடிக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் இதுவரை நாடாளுமன்றத்துக்கும் நாட்டுமக்களுக்கும்தெரியப்படுத்தப்படவில்லை. இது ஏன் என்பது தான் கேள்வியாக உள்ளது. அமைப்பு மாற்றம் (சிஸ்ரம் சேஞ்ச்) என உரத்துப் பரப்புரை செய்து பதவிக்கு வந்தவர்கள் இன்று பதவிகளையும் ஆட்சி அதிகாரத்தையும் இறுகப் பற்றிக் கொண்டு இன்றைய நவகொலனிய நவதாராள முதலாளிய அமைப்பைப் பாதுகாத்து முன்கொண்டு செல்பவர்களாகத் தம்மை நிலை நிறுத்தி வருவதையே காணமுடிகிறது.

ஆட்சி மாற்றம் வந்தபோது இதுவரையான சொத்துசுகபோகஉயர் ஆளும்வர்க்க ஆட்சிகளை விட நாட்டுக்கும் அனைத்து மக்களுக்கும் வரப்பிரசாதங்களைக் கொண்டு வரப்போகும் ஒரு ஆட்சியாக இருக்கும் என்றே வாக்களித்த மக்கள் நம்பினர்.ஆனால் இன்றைய நிலையில் மக்களின் எதிர்பார்ப்புகள் வெறுமையடைந்து வருவதையே காணமுடிகிறது. ஆதலால் தேசிய மக்கள் சக்தி அரசு பதவிக்கு வருவதற்கு முன்பு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும் என்பதை மக்கள் வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர்.

ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியப் பிடிக்குள்ளும், இந்தியப் பிராந்திய மேலாதிக்க வல்லரசு வலைக் குள்ளும் அகப்பட்டு நிற்கும் அநுர குமார திசநாயக்க தலைமையிலான இன்றைய ஆட்சியானது எந்தளவுக்கு நாட்டின் வளங்களைப் பாதுகாத்துத் தேசிய உற்பத்திப் பொருளாதாரத்தைத்திட்டமிட்டு முன்னெடுத்து அனைத்து மக்களதும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களதும் நலன்கள், தேவைகள், உரிமைகளை எவ்வாறு நிலை நிறுத்தப்போகின்றது என்பதே இன்றைய பெரும் கேள்வியாக எழுந்து நிற்கிறது.

இந்த நிலையில் எமது கட்சி பொருளாதார நெருக்கடிகளுக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கும்உள்ளாகிநிற்கும்ஏகப்பெரும் பான்மையான உழைக்கும் மக்களோடும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களோடும் இணைந்து நின்று மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காகக் குரல் கொடுத்துப் போராடுவதேஎமதுஉறுதியானநிலைப்பாடாகும் -- என்றுள்ளது.

# கள்ள மணல் ஏற்றி வந்த டிப்பரை 4 கிமீ துரத்திப் பிடித்த பொலிஸார்

களவாக மணல் ஏற்றிவந்து, பொலிஸார் மறித்த போது நிற்காமல் ஓடிய 'டிப்பர்' ஒன்றை 4 கிலோ மீற்றர் தூரம் துரத்திச் சென்று கைப்பற்றியுள்ளனர் சாவகச்சேரி பொலிஸார்.

பளை பிரதேசத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மண் ஏற்றிவந்த இந்த டிப்பரை சாவகச்சேரி பொலிஸார் நேற்றுக் காலை நுணாவில் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக மறித்து சோதனையிட முற்பட்டனர்.

இதன்போது பொலிஸாரின் சமிக்ஞைகளை மீறித் தப்பிச்சென்ற டிப்பரை நான்கு கிலோ மீற்றர் தூரம் துரத்திச் சென்று மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத்துக்கு முன்பாக வைத்து டிப்பரை மடக்கியுள்ளனர்.

டிப்பரை கைவிட்டு தப்பியோட முற்பட்ட சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் பளை பிரதேசத்தை சேர்ந்தவர். அவர் மீது அனுமதியின்றி மணல் ஏற்றியமை, சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை, பொலிஸாரின் சமிக்கைக்கு கட்டுப்படாமை, விபத்தை ஏற்படுத்தும் வகையில் வாகனம் செலுத்தியமை, பிரதான வீதியில் ஆபத்தான முறையில் வாகனத்தை செலுத்தியமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

# 'அணையா விளக்குப்' போராட்டத்திற்கு வந்த அமைச்சர் சந்திரசேகரனைத் தடுத்தது தவறு

## காணாமலாக்காப்பட்டோர் சங்கத் தலைவி கண்டனம்

'அணையா விளக்கு' நீதிப் போராட்டத்தில் அமைச்சர் சந்திரசேகரனைத் தடுத்தது தவறு என்று வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டோர்சங்கத் தலைவி கனகரஞ்சனி தெரிவித்துள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழிக்கான போராட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்த அமைச்சர் சந்திரசேகரனை சிலர் தடுத்தமை கண்டிக்கத்தக்க விடயம் என்றும் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி கனகரஞ்சினி தெரிவித்தார்.

புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்டர் ராக்கைச் சந்தித்த பின் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

செம்மணிமனிதப்புதைகுழிவிவகாரம் உரியமுறையில்விசாரணைசெய்யப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும். அதனை வலியுறுத்தி இடம்பெற்ற போராட்டத்தில் அமைச்சர் சந்திரசேகரன் கலந்துகொண்டிருந்த வேளையில் சிலர் அவரை தடுத்தனர். அது தவறு அதற்கு நாம் மனம் வருந்துகிறோம்.

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி வேண்டி போராடும் தாய்மார்கள் என்ற வகையில் எமது நீதிக்கான பயணத்தில் ஒன்றிணை வருபவர்களைப் புறக்கணிப்பது எமது நோக்கம் அல்ல.

அமைச்சர் எமது போராட்டத்துக்கு வருகை தந்தது நீதியை எதிர்பார்த்து காத்திருக்கும்எமக்கு சாதகமான விடயம். அவரும் இந்த போராட்டத்துக்குக் கலந்து கொண்டவராய் பொறுப்பு கூறுவதாக இருகும்.

இந்த நிலையில் சில குழப்பவாதிகள் இதனைக் குழப்பும் வகையில் செயற்பட்டுள்ளனர் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ஏமாற்றம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயரானையர் வோல்கர் டர்க் அவர்கள் இலங்கை அரசு மற்றும் பொதுமக்களுடன் நடத்திய ஆலோசனைகள், மேடைகள், மற்றும் முக்கிய சந்திப்புகளுக்குப் பின்னர் வெளியிட்ட கருத்து, பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட பலத்த அழுத்தங்களையும், சர்வதேச விசாரணைகளையும் கொண்டுவரும் வகையில் அமையவில்லை என்பதே வெளிப்படையான உண்மை. இதனூடாக, பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புகளுக்கு நீதி கோருகின்ற பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் மனமுடைப்பு, ஏமாற்றம் மற்றும் ஆத்திரம் அளவிடமுடியாதது.

தனது பயணத்தின் முடிவில் உயரானையர் கூறியதாவது, 'இறுதியில், பொறுப்புக்கூறலைநிறைவேற்ற வேண்டியது இலங்கை அரசின் சொந்த பொறுப்பு' என்பதாகும். இந்தக்கூற்று, நீண்டவருடங்களாகநீதிகேட்டு குரல் கொடுத்துவரும் தமிழ் மக்களின் உணர்வுகளை வேரோடுபுறக்கணிக்கின்றது. கடந்தஇருபதாண்டுகளாக, இலங்கை அரசு எந்தவொரு வழியிலும் உண்மையான நீதியையோ அல்லது பொறுப்புக்கூறலையோ மேற்கொள்ளாமலிருப்பதை சர்வதேசம் முழுதும் அறிவதற்கேற்ப, உயரானையரிடமிருந்து வரவேற்கப்பட வேண்டிய பேச்சு இது அல்ல.

இலங்கையின் முந்தைய ஆட்சி நிலைகளில் மட்டுமன்றி தற்போதைய ஆளும்தரப்பாலும்கூட, உரிய விசாரணைகள்நடத்தப்படவில்லை. இராணுவத்தினரின் மீது குற்றச்சாட்டுகள் தீவிரமாக இருக்கின்றபோதும், அவர்கள் மீது எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த சூழ்நிலையில், 'இலங்கை அரசு தானாகவே நீதியை ஏற்படுத்தும்' என்ற வகையான நம்பிக்கையின் மேல் நியாயமான எதிர்பார்ப்பை வைத்திருப்பது, பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புக்களைக்கண்டுதுன்பத்தோடும்துயரத்தோடும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு ஏமாற்றம் தரும் மிகப்பெரிய கூற்று.

மேலும், ஐ.நாயின் முந்தைய தீர்மானங்களில், சர்வதேச விசாரணைகளின் அவசியம், படையினர் மீதான கண்காணிப்பு, மற்றும் சிறுபான்மையினரின் பாதுகாப்பு போன்றவை சுட்டிக் காட்டப்பட்டிருந்தாலும், இம்முறை உயரானையரின் அறிக்கையில் அவற்றின் மீது உரியவலியுறுத்தல்காணப்படவில்லை. இது, மனித உரிமை மீறல்களின் மீதான சர்வதேச கவனத்தை மெதுவாக பின்னடைய செய்யும் ஆபத்தான ஒரு முன்னுதாரணமாக இருக்கக்கூடும்.

இத்தகைய நிலைமையிலிருந்து வெளிவர ஒரே வழி, பாதிக்கப்பட்ட மக்களது கோரிக்கைகளை புறக்கணிக்காமல், அவர்களின் வேண்டுகோள்களை நேரடியாகக் கேட்டு, சர்வதேச சமுதாயம் தெளிவான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அழுத்தத்தை உருவாக்கவேண்டும். நீதி என்பது இலங்கை அரசால் விருப்பப்பட்டபோது வழங்கப்படக்கூடிய விருப்பதற்கரிய விடயமல்ல, அது அவசியமான, உரிமை சார்ந்த ஒன்றாகவே இருக்கின்றது.

தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் நீதிக்கு வழிவகுக்கும் ஒவ்வொரு முயற்சியும், அவர்களின் அனுபவங்களையும் உணர்வுகளையும் மையமாகக் கொண்டு இருக்க வேண்டுமென்பதே இந்தக் காலத்தின் கட்டாயம். ஐ.நா. உயரானையரின் வெளிப்பாட்டின் பின்னால் மறைந்து கிடக்கும் இந்த வலிமையற்ற அரசியல் நடத்தை இனிமேலும் ஏற்க முடியாது என்பதை சர்வதேச சமுதாயமே உணரவேண்டும்.




# 'அணையா விளக்கு' அரசியல்

**என். சத்திய மூர்த்தி**

செம்மணியில் தோண்டி எடுக்கப்பட்ட மனிதஎச்சங்களைமுன்வைத்துநடத்தப்பட்ட மூன்றுநாள்'அணையாவிளக்கு'போராட்டம், அரசியலாக்கப்பட்டது, கண்டிக்கத்தக்கது. ஐ.நா. மனித உரிமை ஆணையர் வோல்க்கர் டர்கின் யாழ்பாண வருகையை ஒட்டி முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் குறித்தோ, அதன் நடுவே அரங்கேறிய அரசியல் உள்குத்துகள் குறித்தோ அவர் என்ன கருதினார் என்பது இப்போதைக்காவது தெரிய வாய்ப்பில்லை.

இன்னும் சொல்லப்போனால், இதற்குத்தான் ஆசைபட்டார்களா, அங்கு குழப்பம் விளைவித்த ரௌடிகள் என்ற கேள்வியும்எழுகிறது. உண்மையிலேயே, அங்கே இனப்போர் காலத்தில், இராணுவத்தினரால் படுகொலைசெய்யப்பட்ட அப்பாவி தமிழ் மக்களுக்கு அஞ்சலி செய்ய அந்த அடியாட்கள்அங்கேவருகைதந்திருந்தார்களா, அல்லது அவ்வாறு வருகை தரும் சில தலைவர்களை குறிவைத்து அராஜகம் செய்த வந்தார்களா என்ற துணை கேள்விகளும் உடன் எழுகின்றன.

செம்மணியில் நடந்தது இதுதான். அணையா விளக்கு போராட்டத்தின் முடிவு நாளான புதன் கிழமை, அங்கே மரியாதை செய்ய வந்த தமிழ் அரசு கட்சி தலைவர் சிவஞானம், தனது வாகனத்தை நோக்கி திரும்பி நடந்து செல்லும்போது, அவர் பின்னால், அவரைத் துரத்தும் விதமாகக் கூச்சலிட்டுச் சென்றது ஒரு கூட்டம். சிவஞானத்தை, தமிழ் இனவாதிகள் துரத்தி அடித்தார்கள் என்று சாரப்படும்படி சிலதமிழ் சமூக ஊடகங்களே செய்தி வெளியிட்டு மகிழ்ச்சி அடைந்தன.

சிவஞானத்தின் வருகையை எதிர்த்துப் 'போராடிய் கூட்டத்தின் தலைவன், கிளிநொச்சியை சேர்ந்த ஒரு நபர். குறிப்பிட்ட காரணங்களுக்காக தமிழ் அரசு கட்சியில் இருந்து முன்னரே நீக்கப்பட்டவர். என்றாலும், அந்த மாவட்டத்தில் உள்ள சில முக்கிய கட்சி தலைவர்களுடனும் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி உறுப்பினர்களுடனும் நெருக்கமானவர் என்று அறியப்படுபவர்.

## காலத்தின் கட்டாயம்

எண்பத்தைந்து வயதான சிவஞானம், இன்று செயல்படும் தமிழ் தலைவர்களில் முக்கியமானவர். அவரைவிட வயதில் மூத்தவரான அனந்தசங்கரி, வயது மூப்பு மற்றும் உடல்நலமின்மை காரணமாக முன்பு போல் இப்போது செய்திகளில அடிபடாதவர். அதனால், புதிய தலைமுறை தமிழ் இளைஞர்கள் ஆனந்த சங்கரி குறித்து அறியாதவர்கள். குறிப்பாக, விடுதலை புலிகள் அமைப்பு கொடிகட்டி பறந்து, தமிழ் மக்கள் மத்தியிலேயே 'துரோகி' பட்டம் கட்டி, கொடூரங்களையும் அரங்கேற்றி வந்திருந்த காலகட்டத்தில், கொள்கை ரீதியாக அவர்களை தைரியமாக எதிர்த்து நின்றவர்.

இந்த பின்னணியில், தனது வயோதிகத்தையும் பொருட்படுத்தாமல், சம்மந்தன், தொடர்ந்து மாவை சேனாதிராசா ஆகிய இருவரும் இறந்த காலகட்டத்தில், அனாதரவாக விடப்பட்ட தமிழ் அரசு கட்சிக்கு, சிவஞானமே தலைமைத்துவத்தை கொடுத்தார். அதனை தொடர்ந்து, சின்னாபின்னமாக இருந்த கட்சியை ஒட்டுப்போட்டு தூக்கி நிறுத்தினார். அன்று அவர் தனக்கு அரசியலே வேண்டாம் என்று ஒதுங்கி இருந்தால், சிறீதரன், சுமந்திரன் என்று இரு அணிகளாக கட்சி உடைவது காலத்தின் கட்டாயமாகி இருக்கும்.

அதுபோன்றே, உடைந்தவிட்ட தமிழ் தேசியகூட்டமைப்பைமீண்டும்ஒன்றிணைக்க முடியாவிட்டாலும், அண்மையில் நிகழ்ந்த உள்ளாட்சி தேர்தல்கள் மூலம் அனைத்து தமிழ் கட்சிகளையும் ஒரே அணியில் திரட்ட முடியுமா, என்ற நோக்கத்திலும் சில முன்னெடுப்புகளைச் செய்தார். அல்லது, தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் போன்றோர் எடுத்த முன்னெடுப்புகளை அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்ல முயன்றார். அதில் அவர் முழுவதுமாக வெற்றி பெறவில்லை என்பது வேறு விடயம்.

## யாருக்கு பொறுப்பு?

சிவஞானம் மட்டுமல்ல. அவருக்குப் பின்னர், அணையாவிளக்கு நிணைவிடத்தில் மரியாதை செய்யவந்த அமைச்சர் சந்திரசேகரனையும் அவருடன் வந்த இரண்டு ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையும்கூட இந்தக் கும்பல் அவமானப்படுத்தியது. அரசியலில் அவர்களுக்கு இதெல்லாம் சாதாரணம். ஆனால், அந்த நினைவு நிகழ்சிக்கு இதுவே அவமானம்.

எதிர்காலத்தில், எப்போதெல்லாம் இந்த அணையாவிளக்கு நிகழ்வு பேசுபொருள் ஆகிறதோ, அப்போதெல்லாம் இந்த ரௌடியிஸம் அதற்கு முத்தாய்ப்பாய் அமைந்துவிடும். அதேசமயம், குறிப்பாக அமைச்சருக்கு எதிரான கூச்சல்-குழப்பங்களை

தொடர்ச்சி 5ம் பக்கம் ...........

# அணையா விளக்கு.....

4ம் பக்கத் தொடர்ச்சி...........




காரணம் காட்டி, பொலிஸார், ஐ.நா. குழுவினரை செம்மணிக்கு செல்லவிடாமல் தடுத்திருந்தால், அதற்காகப் பொறுப்பேற்க வேண்டியது யார்?

இந்தப் பின்னணியில், அணையா விளக்கு நிகழச்சியை முன்னெடுத்த அரசியல் சாரா தனி நபர்களில் முன்னின்ற உதயசீலன் என்பவரின் விளக்கம்கூட ஐ.நா. மனித உரிமை உயராணையரை அங்கே வரவழைப்பதே ஒரு பெரிய போராட்டம்தான் என்ற உண்மையை உணர்த்துகிறது. குறிப்பாக, அந்த இடத்தில் பூசல்கள் நிகழ்ந்தால், அவரது நிகழ்சி கடைசி நேரத்தில்கூட ரத்து செய்யப்படலாம் என்பதே கள நிலைமையாக இருந்தது என்று அவர் தற்போது தெளிவுபடுத்தி உள்ளார்.

அதுபோன்றே, அந்தக் குறிப்பிட்ட நாளில் ஒவ்வொரு மணித்தியாலத்திலும், அவரது வரவு ஊசலாடிய விவரத்தையும் உதயசீலன் விளக்கி உள்ளார். இன்றும் அரசியலுக்கு அப்பாற்பட்ட தமிழ் இதயங்கள் செயல்படுகின்றன என்ற எண்ணத்தையே இது தோற்றுவிக்கிறது. குறிப்பாக, அவரும் அவருக்குத் தோள் கொடுத்த நண்பர்களும் முழு நேர அரசியலில் ஈடுபடாமல், வெளியில்இருந்தே இது போன்றதனி நபர்களாக பிரச்சினைகளை கையாளவேண்டும்.

## சுமந்திரனுக்கு நன்றி

அணையா விளக்கு போராட்டதில் இந்த அளவிலேயே குழப்பங்கள் தீர்ந்தமைக்கு, தமிழ் அரசு செயலாளர் சுமந்திரனுக்கு நன்றி சொல்லவேண்டும். சொந்த அலுவல்கள் காரணமாக அவர் வெளிநாடு பயணித்துள்ளதால், அவரால், அந்த நிகழ்வில் பங்கெடுத்து மரியாதை செலுத்த முடியவில்லை.

அதனால்கூட, அவரை சொல்லால் மட்டுமாவது தாக்கவிருந்த கும்பல், தமிழ் அரசு கட்சியினுள் அவரது அணியுடன் அடையாளம் காணப்படும் சிவஞானத்தின் மீது தங்கள் வன்மத்தை தீர்த்துக் கொண்டார்கள் எனலாம். போதாததற்கு, சிவஞானத்துடன் கிழக்கில் இருந்து அங்கே மரியாதை செய்ய வந்திருந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் வேறு. அவரை சுமந்திரனின் அரசியல் சீடராகவே பலரும் கருதுகிறார்கள்.

அவர்களுடைய குறி சுமந்திரன் என்று சொல்ல முடியாவிட்டாலும், சுமந்திரன் அங்கே வருகை தந்திருந்தால், அவரை அவமானப்படுத்த, அந்த கும்பல் எந்த எல்லைக்கும் போயிருக்கும் என்பது உறுதி. மாவை சேனதிராசாவின் வீட்டில், அவரது உடலுக்கு சுமந்திரன் மரியாதை செய்ய போயிருந்த போது அங்கு அரங்கேறிய அசிங்கங்களை தான் பார்த்தோமே!

சுமந்திரன் மட்டும் நாட்டில் இப்போது இருந்திருந்தால், மாவை சேனாதிராசா வீட்டு பகுதியில், திடீரென்று முளைத்த சுமந்திரன் - எதிர் பதாகைகள் (பனர்கள்) இங்கேயும் தோன்றி இருக்கலாம். சிவஞானத்தை எதிர்த்துக் கிளம்பிய கூக்குரல்கள் இன்னமும் மூர்க்கத்தனமாக இருந்திருக்கலாம். அவற்றை எல்லாம் இல்லாமல் செய்தது, சுமந்திரனின் வெளிநாட்டுப் பயணம்.

## தமிழருக்கான செய்தி

ஜெனிவாவில், அடுத்த மனித உரிமைகள் குழுவின் கூட்டத்திற்கு முன்னர், உயராணையர் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். இங்கு அவர் அரச தலைமையுடனும் பிற அமைச்சர்களுடனும் பேச்சு நடத்தி உள்ளார். அது போன்றே, தமிழ் அரசியல் தலைவர்களுடனும் சமூக அமைப்புகளுடனும் தலைநகர் கொழும்பு, திரிகோணமலை மற்றும் யாழ்பாணம் ஆகிய இடங்களில் பேசி இருக்கிறார்.

ஒரு விதத்தில், உயராணையரின் வருகையே, அரசிற்கு சர்வதேசம் அனுப்பியுள்ள ஒரு செய்தியாகும். செம்மணியில் பத்திரிகையாளர்களுடன் பேசிய வோல்கர் டர்க், அந்த புதைகுழிகள் குறித்தும் ஒரு சுயாதீனமான விசாரணை தேவை என்று கூறினார். முன்னர் திரிகோணமலையில் பேசும்போது, எந்த விசாரணையாகட்டும், அது அரசின் துணையுடன் அல்லது ஆதரவுடன் மட்டுமே முன்னெடுக்கப்படும என்பதையும் அடிக்கோடிட்டு காட்டினார்.

இதிலிருந்து, தமிழ் மக்களுக்கான செய்தி என்ன? யாழ்ப்பாணத்தில் வோல்கரை சந்தித்த தமிழ் தலைவர்களில் சிலர், இனப்பிரச்சினை, குறிப்பாக போர் குற்றங்கள் ஐ.நா. பாதுகாப்பு சபையில் விவாதிக்கப்படவேண்டும் என்று கருத்து தெரிவித்தனர். இதுவே, அவர்களுக்குச் சர்வதேச அரசியல் குறித்த உள்ளுணர்வு இல்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

காரணம், பாதுகாப்புச் சபையில், மொத்தமுள்ள ஐந்து நிரந்தர உறுப்பினர்களில் சீனா மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளும் அடங்கும். அவர்களது 'வீட்டோ' வாக்கு, பதினைந்து உறுப்பினர்கள் கொண்ட பாதுகாப்பு சபையின் தீர்மானங்களை இல்லாததாக்கிவிடும். அல்லது, வெறும் விவாதப் பொருளாக நீர்த்துப்போகச் செய்துவிடும்.

இந்த இரு நாடுகளும், போர் குற்றங்கள் போன்ற மனித உரிமை மீறல் விடயத்தில் இலங்கை அரசின் பக்கமே நிற்பார்கள். அப்போது, கொழும்புவில் யார் ஆட்சி பொறுப்பில் இருக்கிறார்கள் என்பது குறித்து அவர்கள் கவலைபடமாட்டார்கள்.

## இரும்பு அடிக்கும் இடத்தில்

இந்தப் பின்னணியில், செம்மணி போன்ற நினைவிடத்தில் குழப்பம் விளைவித்த தமிழர்களை இங்குள்ள சில சமூக வலைதளங்களே கொண்டாடுகின்றன. அவர்களைப் பொறுத்த வரையில், அந்த நிகழ்வு சிறப்பாக, சீராக அரங்கேறுகிறதோ இல்லையோ, இந்த சமூக வலைதளங்களின் பின்னால் இருக்கும் புலம்பெயர்ந்தோரின் மனம் குளிரவேண்டும். அவ்வளவுதான். யாரோ, பின்னால் இருந்து ஊது என்று சொன்னால் இவர்கள் ஊதுபவர்கள் மட்டுமே.

அது சரி, செம்மணி நிகழ்விலும் மரியாதைக்குரிய வேலன் சுவாமிகளின் பெயர் மரியாதைக் குறைவாக ஏன் அடிபட்டது? இல்லையென்று சொல்லாமல், 'பொத்துவில் முதல் பொலிகண்டி வரை' போராட்டம் தொடங்கி, அவ்வப்போது, அவருடைய பெயர் தமிழ் அரசியல் பரப்பில் தோன்றி மறைகிறது. அதுவும் பிரச்சினைக்குரிய ஒருவராக. அது ஏன் என்று தெரியவில்லை.

வேறொன்றும் இல்லையென்றாலும், இரும்பு அடிக்கும் இடத்தில், ஈறும்புக்கு என்ன வேலை? இந்தக் கேள்வியும் உடன் எழுகிறது என்பதே உண்மை.



## ஆளும்தரப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்புக் குறித்து அந்த அறிக்கை மேலும் தெரிவித்ததாவது:

தனது இலங்கைப் பயணத்தில் புதிய மாற்றம் குறித்து தெளிவான புரிதலைப் பெற முடிந்ததாகத் தெரிவித்த,வோல்கர் டர்க், இன்று நாட்டின் அனைத்து மக்களும் சிறந்த எதிர்காலத்திற்கான புதிய நம்பிக்கைகளைக் கொண்டுள்ளனர் என்று தான் நம்புகிறார் எனவும் கூறினார்.

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினை குறித்தும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது. வடக்கு மற்றும் தெற்கில் காணாமலாக்கப்பட்டவர்களின்உறவினர்களின் வேதனைகள் ஒரே மாதிரியானவை என்றும் அவர்கள் ஆளும்தரப்பின் மீது வைத்திருக்கும் நம்பிக்கைகள் நிறைவேறும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் எதிர்பார்க்கிறது என்றும் உயராணையர் மேலும் கூறினார்.

தற்போதைய அரசியல் கலாசாரம் காரணமாக மக்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் அவர்களின் உரிமைகள் குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் செயல்படத் தவறியுள்ளதால், காணாமல் போனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நிறுவன கட்டமைப்பை வலுப்படுத்தி மறுசீரமைக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் இதன் போது ஆராயப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த அரசுத் தலைவர் அநுரகுமார, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்சினையை அனுபவ ரீதியாக எதிர்கொண்ட ஓர் அரசியல் இயக்கமாக தனக்கு அது தொடர்பான புரிதல் இருப்பதாக தெரிவித்தார்.

நாட்டில் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை உறுதிசெய்வதற்கும், மனித உரிமைகளைப் பாதுகாக்க தேவையான சீர்திருத்தங்களை செயல்படுத்துவதற்கும் தனது அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்றும் அரசுத் தலைவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதே தற்போதைய நிலைமையில் ஆளும்தரப்பின் பிரதான நோக்கம் என்று கூறிய அரசுத் தலைவர், சவால்களை நன்கு புரிந்துகொண்டு, அந்த நோக்கத்திற்காக உறுதிபூண்டுள்ளதாகவும், சர்வதேச அளவில் அனைவரின் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

இலங்கையின் இந்த உண்மையான நிலைமையை உலகிற்கு கொண்டுசெல்வதன் மூலம் சர்வதேச அளவில் இலங்கையின் நற்பெயரை மேம்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் ஆதரவு அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கான ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆண்ட்ரே பிராஞ்ச்(னிழிஷஉ-புஜ-ஷலய்ஷழிஜஉ ஜூள), மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் ஆசிய-பசிபிக் பிரிவு பிரதானி ரோரி மங்கோவன்(யூலிஷதீ னிற்ஜஆலிஸளஜ), மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக அதிகாரி எலேன் சேன்(சியிழிஷ்ஜளளீஜூழிஜ), ஐ.நா அலுவலக சிரேஷ்ட மனித உரிமைகள் ஆலோசகர் லைலா நசராலி(ஸிழிஷ்யிழி ஹிழிகு-ழிஷழியிஷ்), அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அதிகாரி அஸாம் பாக்கீர் மார்கர்(புகுழிது யழிவளளஷ னிழிஷவழிஷ), மற்றும் ஊடக மற்றும் தகவல் அதிகாரி அந்தணி ஹெட்லி (புஜமிஜூலிஜதீ கூஷிளழி-யிளதீ)ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இலங்கை ஆளும்தரப்பின் சார்பாக நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் ஹர்ஷனநாணயக்கார, பொதுமக்கள்பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கொடிகாமம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணிகளை ஏற்றி இறக்குவது கட்டாயம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் மகேஸ்வரன் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஏ--9 வீதியில் கொடிகாமம் சந்தியிலிருந்து பரந்தன் சந்திக்கு இடையிலான பகுதிகளைச் சேர்ந்த மக்களும், பாடசாலை மாணவர்களும் தங்களுக்கான போக்குவரத்துச் சேவை சீராகக் கிடைப்பதில்லையென கிளிநொச்சி மாவட்டச் செயலரிடம் முறையிட்டுள்ளனர். அதற்குத் தீர்வு காணும் வகையில் இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் ஆகியனவற்றுக்கு என்னால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறுந்தூர பேருந்து சேவை இல்லாத காரணத்தால் இப்பகுதி பயணிகள் நீண்டதூர பேருந்துகளையே நம்பியுள்ளனர். ஆனால் பல நீண்டதூர பேருந்துகள் இப்பகுதியிலுள்ள பயணிகளைஏற்றாமல்தவிர்க்கின்றன. எனவே ஏ-9 வீதியில் சேவையில் ஈடுபடுகின்ற யாழ் - வவுனியா, யாழ் - முல்லைத்தீவு, யாழ் -கிளிநொச்சி, யாழ் - துணுக்காய் வழித்தட பேருந்துகள் அனைத்தும் கொடிகாமம் சந்தி தொடக்கம் பரந்தன் சந்தி வரையிலுமான குறுந்தூர பயணிகளை ஏற்றிச் செல்லுதல் கட்டாயம் என கடமையில் இருக்கும் சாரதி, நடத்துநர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குமாறு இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் ஆகியனவற்றுக்கு அறிவித்துள்ளேன் - என்றுள்ளது.

## தடயவியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லிணக்க செயன்முறை தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. குறிப்பாகக் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் ஆகியவற்றின் அண்மைக்கால செயற்பாடுகள் தொடர்பில் அதிகாரிகளிடம் வினவினார் உயராணையர். காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகளை செயற்திறன்மிக்கவகையில் முன்னெடுப்பதற்கு சர்வதேச சமூகம் எவ்வாறான உதவிகளை வழங்கமுடியும் என்றும் கேட்டறிந்தார்.

அதற்குப் பதிலளித்த காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள், அலுவலகத்தின் செயற்பாடுகள் மற்றும் தேவைப்பாடுகள் பற்றி தம்மால் மதிப்பீட்டு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டதாகவும், அதிலுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான உதவிகளை வழங்குமாறும் வேண்டுகோள்விடுத்தனர்.

அதேவேளை செம்மணி உள்ளடங்கலாக காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதப்புதைகுழி அகழ்வு நடவடிக்கைகள் குறித்து உயராணையருக்கு விளக்கமளித்த அதிகாரிகள், அந்த மனிதப் புதைகுழிகளில் கண்டறியப்படும் மனித எச்சங்கள் தொடர்பில் பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கு ஏற்றவாறான தடயவியல் விஞ்ஞான ஆய்வுகூடமொன்றை நாட்டில் நிறுவுவது பெரிதும் பயனுடையதாக அமையும் எனவும் சுட்டிக்காட்டினர்.

அதனை செவிமடுத்த உயராணையர் ஆய்வுகூடத்தை நிறுவுதல் என்பது சாதகமான முறையில் பரிசீலிக்கப்படவேண்டிய விடயமாகும் எனக் குறிப்பிட்டதுடன் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகளில் தன்னால் முன்னேற்றத்தை அவதானிக்கமுடிவதாகவும் தெரிவித்தார்.

## தோட்டக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீர் இறைத்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தில், கிணற்றில் இருந்த மீன்களைப் பிடிப்பதற்காக வாளியை கயிற்றுடன் கிணற்றில் இறக்கிய போது கால் தடுமாறிய சிறுவன் கிணற்றுக்குள் வீழ்ந்துள்ளான் என்று பொலிஸார் கருதுகின்றனர். கிணற்றில் அதிகளவு நீர் காணப்பட்டமையால் சிறுவன் மூச்சுத் திணறி உயிரிழந்தான் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுவனின் உடல்கூறாய்வுகளுக்காக அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## சட்டம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாசாரம் பெருகியுள்ளது. உயிரிழப்புகள், கொலைகள் மற்றும் வன்முறைகளும் அதிகரித்து வருகின்றன. திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் கும்பல்களும், அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளும் சமூகத்தைப் பயமுறுத்தி வருகின்றனர். இன்று சமூகத்தில் சட்டத்தின் ஆட்சி இல்லை. ஒரு ஜனநாயக நாட்டில் இருக்க வேண்டிய வலுவான பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கை தற்போதைய அரசாங்கம் செயல்படுத்தத் தவறிவிட்டது.

இவ்வாறு நாட்டில் இருக்கும் இளைஞர்களை நாம் இழக்கும்போது, கொலையாளிகள் மற்றும் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளால் மனித உயிர்கள் இழக்கப்படும்போது, தற்போதைய அரசாங்கம் தேசிய பாதுகாப்புக்கு முக்கிய அம்சமாக அமைந்து காணப்படும் வாழும் உரிமையை உறுதி செய்யத் தவறிவிட்டது. கொலைக் கலாச்சாரம் நாளுக்குநாள் அதிகரித்துவருகிறது. அரசாங்கம் பல்வேறு புள்ளிவிவரங்களைக் காட்டினாலும், இந்த மனித உயிர்களை வெறும் புள்ளிவிவரங்களுடன் சுருக்கிக் கொள்ள முடியாது.

இந்த மனித உயிர்களின் மதிப்பை பணத்தை வைத்தும் அளவிட முடியாது. கொலைகாரர்களின் அச்சுறுத்தல்களால் முழு சமூகமும் மூழ்கடிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில், அரசாங்கத்திடமிருந்து இதற்கான தீர்வுகளும் பதில்களும் தேவை. சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இன்று, ஐஸ் போதைப்பொருள் சமூகத்தில் பரவலாக வியாபித்து காணப்படுகின்றது. இளைஞர்கள் மட்டுமல்லாது, பாடசாலை மட்டத்திலும் கூட இந்த போதைப்பொருள் பரவி காணப்படுகிறது. இதன் காரணமாக, நாடு இளம் தலைமுறையினரை இழந்து வருகிறது. எனவே, நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம். இவை தேசிய பாதுகாப்புக்கு கடுமையான சவாலாக அமைந்து காணப்படுகின்றன. இந்தப் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடம் பதில்கள் இல்லாமல் இருப்பது வருந்தத்தக்கது.

பொருட்களின் விலை அதிகரிப்பு, அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு காணப்படும் தட்டுப்பாடு, மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நலன்புரி சார் விடயங்களில் நடக்கும் வெட்டுக்கள் போலவே மறுபுறம் கொலைக் கலாசாரத்தால் உயிர் இழப்புகளும் நடந்து வருகின்றன. இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டியது ஆளும்தரப்பின் பொறுப்பாகக் காணப்படுகின்றன.

நாடாளுமன்றத்தில் இது குறித்து கேள்வி எழுப்பும் சந்தர்ப்பங்களில், புள்ளிவிவரங்களை முன்வைத்து, இவை சாதாரண கொலைகள் என்று ஆளும்தரப்பு பிரஸ்தாபித்து வருகிறது. ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் ஆளும் தரப்பினர் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என தெரிவித்தனர்.

மக்களுக்கு இவ்வாறு கூறியே ஆட்சிக்கு வந்தனர். அவர்களால் முறைமையில் மாற்றத்தை கொண்டு வர முடியாது போயுள்ளது. தேசிய பாதுகாப்பு, குடிமக்களின் பாதுகாப்பு மற்றும் வாழும் உரிமையை உறுதிசெய்வதற்கு நாங்கள் நிபந்தனையற்ற ஆதரவைத் தருவோம் -என்றுள்ளது.

# டீசல் எடுத்து வந்த வாகனம் குடமுருட்டி அருகே கவிழ்ந்தது

## சிந்திய எரிபொருளை அள்ளுவதில் சிலர் ஆர்வம்

*கிளிநொச்சிகுடமுருட்டிபாலத்துக்கு அருகில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து 33 ஆயிரம் லீற்றர் எரிபொருள் தாங்கி ஒன்று தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.*

*இந்த விபத்து நேற்று அதிகாலை நிகழ்ந்தது. முத்துராஜவெலவில் இருந்து காங்கேசன்துறை நோக்கி பூநகரி வீதியால் பயணித்த 33 ஆயிரம் லீற்றர் எரிபொருள் தாங்கியே இவ்வாறு விபத்துக்குள்ளனது.*

*விபத்தின்போது எவருக்கும் பாதிப்பு ஏற்படாதபோதும் அதிக எரிபொருள் வீதியில் சிந்தி நாசமாகியது. கொள்கலனில் இருந்த 33 ஆயிரம் லீற்றர் டீசலில் அதிக டீசல் வெளியேறி விரயமாகியுள்ளது.*

*இந்த விபத்தால், டீசல் கொள்கலனில் இருந்து வெளியேறிய டீசலை சிலர் 'கான்'களில் பிடித்துச் சென்றனர். மண்ணோடு கலந்த டீசலையும் அவர்கள் அள்ளிச் சென்றதைக் காணமுடிந்தது.*

## நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பில் தெரிவித்தார் என்று கூறப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் திருத்தம், மனித உரிமைகளைப் பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணை ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தென்னாபிரிக்க ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர் அனுஷ்கா லெவ்கே ஆகியோரும் இந்நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

இந்தத் தகவல்கள் அனைத்தும் அரசுத் தலைவர் செயலகத்தின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.



காலைக்கதிர் Kalaikkathir

உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

## கதிர்காமத் திருவிழாக் காண வேண்டாமோ ?

இம்முறை தமிழ் வழக்கப்படி ஆனி மாதத்தில் கதிர்காமத் திருவிழா ஆரம்பமாகியுள்ளது.

இம்முறை முன்னதாக உத்ஸவம் தொடங்குவதால், பாதயாத்திரை செய்யும் அன்பர் பெருமக்கள் சித்திரையிலேயே பயணிக்கத் தொடங்கி இப்போது கதிர் மலையைச் சென்று சேர்ந்திருக்கிறார்கள்.

கதிர்காம வெற்பில் உறைவோனாய கனக மேரு ஒத்த புய வீரன், மதுர வாணி உற்ற கழற் பெருமானின் பெருமைகள் மிகப்பெரியது.

காஷ்மீரத்தைச் சேர்ந்த துறவி கல்யாண கிரி. அத்வைத பாரம்பரியத்தைச் சேர்ந்தவராக நம்பப்படும் அவர் கந்தப்பெருமானிடம் மாறாத பக்தி மிக்கவர்.

வேத சாஸ்திரங்கள் மட்டுமன்றி, குமரன் பெருமை பேசும் ஸ்காந்தம் மற்றும் குமாரசம்பவம் முதலிய நூல்களையும் நன்கு கற்றவர். அவர் காலத்தில் காஷ்மீரிலிருந்தும் இலங்கையிலிருக்கும் கதிர்காமத்துக்கு யாத்திரீகர்கள் வந்து போயினர்.

இந்நிலையில் கல்யாணகிரி முருகன் அருள் வேண்டி கதிர்காம கிரிக்கு வந்தார். உறவு, உறக்கத்தை குறைத்து பன்னிரண்டு ஆண்டுகள் சடாக்ஷரத்தை ஜெபித்து தவம் செய்தார்.

வனமுறை வேடன் அருளிய பூசை மகிழ் கதிர்காமம் உறைவோன் அவர் மனதில் ஒரு ஆசையை விளைவித்தான்.

அந்த வகையில், தங்க தகட்டில் யந்திரம் எழுதி அதில் கதிர்காம சுவாமியின் சாந்நித்யத்தை மந்த்ர பூர்வமாக உரு ஏற்றி காஷ்மீரம் கொண்டு செல்ல கல்யாணகிரி முயற்சி செய்தார்.

அவருக்கு ஒரு வேடுவ சிறுவனும் சிறுமியும உதவுவது வழக்கம். அன்றோ அந்த யந்த்ரத்தை எடுத்துக் கொண்டு அவர்கள் ஓடினர்.

ஓடுகிற அவர்களை பிடிக்க சுவாமிகளும் ஓடினார். அவர்களோ வள்ளியும் வள்ளிக்கு வாய்ந்த வேலனுமாய் காட்சி தந்தனர். நீலச்சிகண்டியில் ஏறும் பிரான் எந்த நேரத்திலும் கோலக்குறத்தியுடன் வருவான் என்பதை அவர் உணர்ந்தார்.



ஸ்ரீ வல்லி தேவசேனா சமேத சுப்ரம்மண்யனை– கலியுக வரதனை அவர் தரிசித்தார். அந்த குமரக்கடவுளின் அருளை பெற்றார்.

அதன் பின் குமரவேளின் ஆணைப்படி கதிர்காமத்திலேயே ஒரு மடத்தை ஏற்படுத்தி குக பூஜை, குக பக்த சேவை இவைகளை செய்து வரும் முறைமையை உண்டாக்கினார். அவர் உருவாக்கிய யந்த்ரமே இன்றும் கோயில் கருவறையில் ரஹஸ்ய பூஜை பெறுவதாக நம்பப்படுகிறது.

கல்யாண கிரி சுவாமிகள் சமாதி நிலை பெற்ற போது அவரது உடல் முத்து போல சுயம்பு லிங்கமாக மாற அவரது பெயர் 'முத்துலிங்க சுவாமிகள்' என்றழைக்கப்பட்டது.

மணிதரளம் வீசி யணியருவி சூழ– மாணிக்க கங்கை கரையில்– மருவும் கதிர் காமம் புராண பிரசித்த பெற்ற ஹேம கூடம். அருணகிரி பாடிய ஸ்தலம்.

விதிகளுக்கு அப்பாற்பட்ட, நம் விதி மாற்ற வல்ல அதிசயன் ஆறுமுகன் உறையும் அத்புத ஸ்தலம். நினைத்தாலே வரம் தரும் பதி.

ஜோதி காமேஸ்வரனாக இங்கே இறைவன் முருகன் தன்னடியார் விரும்பியவற்றை எல்லாம் அருளும் அருள் வள்ளலாகத் திகழ்கிறான்.

அவனது பெருவிழாக் காலத்தில் நாமும் கதிர்காமத்து ஐயனைப் போற்றுவோம். அவன் அருள் பெறுவோம்..

கல்யாணாத்புத காத்ராய காமிதார்த்த ப்ரதாயிநே
ஜோதி காம புரேய ஸ்ரீ குமாராய தே நம:

மயூரகிரிக்குருக்கள்

## ஆனந்த வாழ்வு அருளும் ஆனி உத்தரத் திருமஞ்சனம்

அபிஷேகப் பிரியனான ஆடவல்ல பெருமான்– நடராஜ மூர்த்திக்கு ஆண்டு முழுவதும் சிறப்பாக ஆறு மகா அபிஷேகங்கள் நிகழ்கின்றன.

அவற்றுள் மார்கழித் திருவாதிரையும் ஆனி உத்தரமும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. அதற்குக் காரணம் இவை இரண்டும் தேவர்களது சந்திக்கால ஆராதனைக் காலங்கள் ஆகும்.

அதாவது எமக்கு ஒரு ஆண்டானது தேவர்களுக்கு ஒருநாள் ஆகும். அதில் மார்கழி விடிகாலை நேரம். ஆனி சாயங்காலமான மாலை நேரம். இவ்விரு நேரமும் சிறப்பாக இறைவனை வழிபடுவதற்குரியன.

அதனால்தான் பூணூல் அணிந்த இருபிறப்பாளர்கள் அனைவரும் இவ்விரு வேளையும் சந்தியாவந்தனம் செய்ய வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது.

அவ்வகையில் ஆறு அபிஷேக நாளிலும் இவ்விரண்டும் தனிச்சிறப்பு பெறுவதால் இந்த இரண்டு அபிஷேகத்தையும் மட்டும் சிதம்பரத்தில் கொடியேற்றி பஞ்சரத பவனியுடன் கூடிய மஹோத்ஸவமாகக் கொண்டாடுகிறார்கள்.

அதிலும் திருவாதிரை பொதுவாக சிவபெருமானுக்கே உரிய சிறப்பான நட்சத்திரம்.

ஆனால், உத்தரம் என்பது உயர்ந்த மங்கலகரமான நட்சத்திரம்.

அதனால் உத்தரத்தில் உயர்ந்த–நற்காரியங்களைச் செய்வர். தை உத்தரமே திருச்செந்திலாண்டவனின் வருஷாபிஷேக நாள். பங்குனி உத்தரமே தெய்வத் திருமணங்கள் நிகழ்ந்த நாள். அது போல ஆனி உத்தரம் நடராஜரின் திருநாள்.

ஆடினாய்நறு நெய்யொடு பால்தயிர்
அந்தணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடினாயிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய்மறை யோடுபல் கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடினாயருளாய் சுருங்கஎம தொல்வினையே

என்ற திருஞானசம்பந்தர் தேவாரத்திற்கு அமைய பல்வகை அபிஷேக திரவியங்களாலே தில்லைவாழ் அந்தணர் பெருமக்களால் அபிஷேகிக்கப்பெற்றவராக ஆனந்தக் கூத்தர் ஆனந்த நடனம் செய்து அருளும் நாள் இது .

இதனால் பல்வேறு திருக்கோயில்களிலும் ஆனி உத்தரத்தை மகா கும்பாபிஷேக நாளாக கொள்வதும் மரபு. மாவிட்டபுரத்தில் முதன்முதலாக சோழ அரசன் கந்தசுவாமியாருக்குக் கோயில் அமைத்து கும்பாபிஷேகம் செய்த நாளும் இதுவே.

இத்தகு மகோன்னதமான திருநாள் இவ்வாண்டு 02.07.2025 புதன்கிழமை வருவதும் கவனித்தற்குரியது.

இந்த ஆனி உத்தரத்தை ஒட்டியே குமார சஷ்டி என்ற முருகனுக்கு உகந்த வளர்பிறை சஷ்டித் திதியும் சேருவது வழமை.

இப்படி அப்பனுக்கும் சுப்பனுக்கும் (சுப்பிரமணியனுக்கும்) உகந்த இந்த நாட்கள் வழிபாட்டுக்கும் புதிய நற்கருமங்களை ஆற்றுவதற்கும் உகந்தவை.

எனவே, ஆனந்த வாழ்வு பெற ஆனி உத்தரத்தில் ஆனந்த நடராஜனைப் போற்றுவோம்.

சிவஸ்ரீ தி.மயூரகிரிக்குருக்கள், நீர்வேலி


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் சொத்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical
University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDr
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.06.2025இல் வெளியிடப்பெற்றது